# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 26.09.2023 supeedsam.com supeedsam@gmail.com


# கிழக்கில் தமிழ் மக்களின் காணி அபகரிப்பு என்னால் எதுவும் செய்ய முடியாதென ஆளுநர் கைவிரிப்பு



மயிலத்தமடு மாதவனை போன்ற பிரதேசங்களில் இடம்பெறும் தமிழருக்கு சொந்தமான காணிகளானது மகாவலி அதிகார சபைக்கு உட்பட்டது என்பதனால் தன்னால் எந்தவித தீர்மானமும் மேற்கொள்ள முடியாது என கிழக்கு

02 ஆம் பக்கத்தில்...

## புதிய சட்டத்தின் மூலம் மக்களை அடக்குவதற்கு இலங்கை அரசு முயற்சி

### சாணக்கியன் எம்.பி குற்றச்சாட்டு



மக்களை அடக்குவதற்கே இலங்கை அரசு புதிய சட்டத்தை அறிமுகம் செய்ய முனைகிறது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சாட்டியுள்ளார்.

திருகோணமலை மக்கேசர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு

02 ஆம் பக்கத்தில்...

## நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கவே முடியாது

‘இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு ஜனநாயக வழியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மூவின மக்களுக்கும் உரிமை உண்டு. அதைத் தடுத்து நிறுத்துவது அடிப்படை உரிமை மீறலாகும்.’

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

02 ஆம் பக்கத்தில்...



## கிழக்கில் 700 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் ஆளுநரின் கோரிக்கைக்கு அமைச்சரவையில் அங்கீகாரம்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் மேலும் 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான அனுமதி கையொப்பமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு இந்த கையொப்பமிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் செந்தில் தொண்டமானால் கிழக்கு மாகாணத்தில் 633 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவும், கல்வி துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கிலும் இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைத்திரிக்கு தக்க பாடம் புகட்டுவேன்



என்றாவது ஒரு நாள் எனக்கு அதிகாரம் கிடைத்தால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நான் பாடம் புகட்டுவேன் எனவும் சட்டம் என்றால் என்ன? நீதி என்றால் என்ன என்பதை அவருக்கு கற்றுக் கொடுப்பேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## இம்ரான் மக்ரூப்புக்கு கிழக்கு மீனவர்கள் விடுத்துள்ள சவால்

இம்ரான் மக்ரூப் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்துவிட்டு, மீனவர்களுடன் இணைந்து மீன்பிடி தொழில் செய்யதால் மாத்திரமே எங்களது உணர்வுகளை புரிந்துக்கொள்ள முடியும் என திருகோணமலை மாவட்ட மீன்பிடி சங்க தலைவர் என்.சி.பியாலஹேம ஸ்ரீ தெரிவித்துள்ளார்.

‘அரசால் தடைவிதிக்கப்பட்ட சுருக்கு

02 ஆம் பக்கத்தில்...



## வாகன வருமான உத்தரவுப் பத்திர விநியோகம் இடைநிறுத்தம்!



(அபு அலா)

கிழக்கு மாகாணத்தில் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் வழங்கும் கணனி முறைமையின் புதுப்பித்தல் காரணமாக அந்த நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண மோட்டார் போக்கு

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



“சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO



Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598 25605: cicero

# கண்டி- கோழும்பு நெடுஞ்சாலையில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து





(எம்.எம்.ஜெஸ்மின்)

கொழும்பு - கண்டி நெடுஞ்சாலையில் வேவெல்தெனிய தித்தவேல்மங்கட பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸுடன் மற்றுமொரு பஸ் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து (25) அதிகாலை 3.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன், விபத்தில் காயமடைந்த 15 பேர் வட்டுபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிமடையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேலும் ஒரு பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியுள்ளதாக பஸ்ஸில் பயணித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் வெலிமடை - கொழும்பு பஸ்ஸில் பயணித்தவர்களே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

# உண்ணாவிரதி தியாகி திலீபனுக்கு கல்முனையில் நினைவேந்த தடை!

## உண்ணாவிரதியான ராஜனுக்கு உ போலீஸ் நிலையங்கள் தடை உத்தரவு!



( வி.ரி.சகாதேவராஜா)

உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி திலீபனுக்கு கல்முனையில் நினைவேந்தல் நடாத்துவதற்கு உண்ணாவிரதமிருந்த ராஜனுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

த.தே.கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் கல்முனையில் உண்ணாவிரதம் இருந்த உண்ணாவிரதியுமான சந்திரசேகரம் ராஜனுக்கு இந்த தடை உத்தரவை இரண்டு போலீஸ் நிலையங்கள் விடுத்துள்ளன. கல்முனை போலீஸ் நிலையத்தில் இருந்தும், பெரிய நீலாவணை போலீஸ் நிலையத்திலிருந்தும் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றது .

இவற்றை நேற்று (25) திங்கட்கிழமை இரவு போலீசார் அவரிடம் கையளித்தார்கள்.

# மாளிகைக்காடு பிரதேசத்தில் கடலரிப்பை தடுப்பதற்கான முதற்கட்டப் பணிகள் பூர்த்தி

(ஏ.எஸ்.மௌலானா)

மாளிகைக்காடு பிரதேசத்தில் கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கான முதற்கட்ட வேலைத் திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மாளிகைக்காடு பிரதேசத்தின் முழுக் கரையோரத்திற்குமாக சுமார் 850 மண் மூடைகள் பாதுகாப்பு அணையாக அடுக்கப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மாளிகைக்காடு பிரதேசத்தில் உக்கிரமடைந்திருந்த கடலரிப்பு காரணமாக அங்குள்ள கலாசார மண்டபம் உட்பட பொதுக் கட்டிடங்கள் மற்றும் வாடிகள் கடுமையாக சேதமடைந்து வந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், கரையோரம் பேணல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகாரிகளின் கவனத்திற்கு இப்பிரச்சி



னையை கொண்டு சென்று பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இதன் பயனாக அங்கு விஜயம் மேற்கொண்ட உயர்மட்ட அதிகாரிகள் குழு கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கான நிரந்தரத் தீர்வாக அலைத் தடுப்புச் சுவர் அமைப்பதெனவும் முதற்கட்டப் பணியாக மண் மூடையடுக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதெனவும் தீர்மானித்து, சில தினங்களிலேயே அப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பணிகள் குறுகிய காலத்திற்குள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டமைக்காக பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் மற்றும் கரையோரம் பேணல் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பொறியியலாளர் எம்.துளசிதாசன் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் இப்பகுதி மக்கள் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதாக சிவில் அமைப்புகளின் சார்பில் இவ் வேலைத் திட்டத்தை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாளிகைக்காடு கிழக்கு வட்டார அமைப்பாளர் எம்.எச்.நாஸர் குறிப்பிட்டார்.

# யாழ் செல்வசன்னிதி ஆலய ஆதீனம் திருகோணமலையில் நிதி நன்கோடை வழங்கி பல் வேறு சேவைகள்..!



(அ . அச்சுதன்)

உதயபுரி உதயவிருச்சம் சனசமூக நிலைய செயலாளரும் உதயபுரி அருள் மிகு ஸ்ரீமுத்துக்குமார சுவாமி ஆலய தலைவரும் ஆன ஆர்..விஜேந்திரன் அவர்களின் பணிவான வேண்டுகோளுக்கும் சிபார்சுக்கும் அமைய யாழ் செல்வசன்னதி ஆலய ஆதீனம் மோகன் ஐயா அவர்களின் நிதி பண்முகப்படுத்தலில் தி/பாரதி தமிழ் வித்தியாலம் பாடசாலைக்கு ரூபாய் 100,000/= நன்கொடை நிதியாகவும், மூன்று மாணவர்களுக்கு மூக்கு கண்ணாடியும் , தி/விபுலானந்த கல்லூரி மாணவி இரண்டு பேருக்கு துவிச்சக்கரவண்டியும், உதயபுரி முருகன் ஆலயத்திற்க்கு நிதி நன்கொடையாக ரூபா 100,000/= வும் வழங்கி வைத்தார்.

# வாகன வருமான உத்தரவுப் பத்திர விநியோகம்...

வரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் ஐ.எம்.றிக்காஸ் அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தற்போதுள்ள அமைப்புக்குப் பதிலாக புதிய அமைப்பை நிறுவும் நடவடிக்கை தற்போது முடிவடைந்துள்ளது. அதனால், 2023.10.03 ஆம் திகதி முதல் புதிய அமைப்பை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை ஆரம்பிக்கவுள்ளதால், வாகன வருமான உத்தரவுப் பத்திரம் வழங்குவது 26ஆம் திகதி மாலை 7.00 மணிக்குப் பின்னர் 27 ஆம் திகதி முதல் அக்டோபர் மாதம் 02ஆம் திகதி வரை தற்காலிகமாக நிறுத்தப்படவுள்ளது.

இதன்படி, எதிர்வரும் மாதம் 26ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி வரை காலாவதியாகும் வாகன வருமான உத்தரவுப் பத்திரங்களை அபராதம் செலுத்தாமல் புதுப்பிக்கலாம்.

இணையத்தளம் மூலம் (Online) வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறுவது, செப்டம்பர் மாதம் 24ஆம் திகதி நள்ளிரவு முதல் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் சமாதான நீதவான்களுக்கு கருத்தரங்கு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையம் மண்முனை தென்எருவில்பற்று - களுவாஞ்சிகுடி மற்றும் போரதீவுப்பற்று - வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் சமாதான நீதவான்களுக்காக கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளனர்.

குறித்த கருத்தரங்கானது எதிர்வரும் 30.09.2023 திகதி சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி பிரதேச செயலக பிரிவுகளில் வசிக்கும் அனைத்து சமாதான நீதவான்களும் சமூகமளித்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றனர் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் நிருவாகத்தினர்.

# இம்ரான் மக்ரூப்புக்கு கிழக்கு மீனவர்கள் விடுத்துள்ள ...

வலை பயன்பாட்டை தடை செய்ய கோரி ஆளுநர் செந்தில் தொண்டாமானை சந்தித்து, தங்களது பிரச்சினை குறித்து அவரது கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில்,ஆளுநரால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், இம்ரான் மக்ரூக் மீனவ சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர் என்றால் பக்க சார்பற்ற நிலையில் நடந்துக் கொள்ள வேண்டும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் அரசால் தடைவிதிக்கப்பட்ட ஒரு வகையான சுருக்கு வலைகளை பல மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

மீன் இனம் அழிவடைந்து வருவதோடு, மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிப்படைகின்றது. இவ்விடயம் குறித்து கரிசனை காட்டாத பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் சட்ட விரோத மீன்பிடியை ஊக்குவிக்கிறார்.

அரசால் தடைசெய்யப்பட்ட 5/8,6 இல போன்ற சுருக்கு வலைகள் அரசால் தடைசெய்யப்பட்டதோடு இரவு நேர மீன்பிடியும் (night course ) தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால், சில மீனவர்கள் தடைசெய்யப்பட்ட சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் 1 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றனர். அரசாங்கத்தால் மீனவர்களுக்கு என சமூர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது ஆனால் சட்ட விரோத மீன்பிடி தொடருமானால் மீனவர்களின் வாழ்வாதார பாதிப்பை அரசே பொறுப்பேற்க வேண்டிய நிலை உருவாகும். அரசால் தடைவிதிக்கப்பட்டுள்ள சுருக்கு விலை பயன்பாட்டால் பேச்சலை வௌவால்,தேரா் பாறை,கீரை மீன் பிற இனங்கள் முற்றாக அழிந்துவிட்டது. இது தொடருமானால் எதிர்காலத்தில் எமது சந்ததியினர் படங்களில் மாத்திரமே மீன்களை பார்க்க வேண்டிய நிலை உருவாகும். எனவே அரசால் தடைவிதிக்கப்பட்ட வலைகளின் பாவனைகளை பயன்படுத்தலாம் என கூறிய இம்ரான் மக்ரூப் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வலைகளை மேலும் பயன்படுத்துவதற்கு தரகர் வேலை பார்ப்பாரானால் அவரை முற்றுகை இடுவோம்'என மீனவ சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கவே..

'தமிழ் மக்கள் மீண்டுமொரு போரை விரும்பவில்லை. விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்வது அவர்களின் நோக்கம் அல்ல. அவர்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியாக நடத்தினால் நாம் அதற்கு இடமளிக்க வேண்டும்.

திலீபன் நினைவேந்தல் நிகழ்வால் இன மோதல் ஏற்படும் என்று தவறான கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் எவரும் பரப்பக்கூடாது.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் வடக்கு - கிழக்கு மக்கள் அமைதியான முறையில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தினார்கள். தற்போதைய ஆட்சியிலும் அவ்வாறான நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் நடத்தத் தடை போட முடியாது.

ஆனால், இவ்வாறான நிகழ்வுகள் மூலம் தமிழ் அரசியல்வாதிகள் சுயலாபம் தேட முற்படக்கூடாது. சிங்கள மக்களை வெறுப்பேற்றும் வகையில் அவர்கள் செயற்படக்கூடாது.

மூவின அரசியல்வாதிகளும் மூவின மக்களின் உறவுப் பாலமாகத் திகழ வேண்டும்.' என்றார்.

# மைத்திரிக்கு தக்க பாடம் புகட்டுவேன்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தில் எனக்கும், சிறானி பண்டாரநாயக்கவுக்கும் எவ்வாறு நியாயம் வழங்குவது என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என்ற முன்மொழிவு காணப்பட்டது.

இவற்றுக்கு இணக்கம் தெரிவித்த பின்னரே பொது வேட்பாளராக அவர் வேட்புமனு தாக்கல் செய்தார்.

அவருக்காக 100 தேர்தல் பிரசார கூட்டங்களை நான் நடத்தியிருக்கின்றேன். தேர்தல் கூட்டங்களில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அதிபர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அனைவரும் பாரிய அர்ப்பணிப்புக்களை செய்தனர்.

ஆனால் பதவியேற்று 48 மணித்தியாலங்களுக்குள் அவர்கள் அனைவருக்கு எதிராகவும் செயற்படத் தொடங்கியவரே மைத்திரிபால சிறிசேன.

இராணுவத்தைப் பற்றி அடிப்படை அறிவு கூட அவருக்கு இல்லை. இங்கிலாந்தில் இராணுவத் தளபதியாக பதவி வகிப்பவர்கள் பீல்ட் மார்ஷல் ஆவர். ஆனால் அந்நாட்டு இராணுவத்தில் 80000 சிப்பாய்கள் மாத்திரமே இருப்பர். பீல்ட் மார்ஷல் பதவிக்கும் சிப்பாய்களின் எண்ணிக்கைக்கும் தொடர்பில்லை.

மஹிந்த ராஜபக்ச எனது கேர்ணல் நிலையை நீக்கிய போது, எனக்கு பீல்ட் மார்ஷல் நிலையை வழங்குவதாக ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றத்தில் வாக்குறுதியளித்தது.

அந்த வாக்குறுதியையே மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றினார். மாறாக அவரது கால்களில் விழுந்து நான் பீல்ட் மார்ஷல் நிலையைப் பெறவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கான சூழலை மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் எவ்வாறு உருவாக்கினர் என்பதை நான் நாடாளுமன்றத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். என்றார்.

# புதிய சட்டத்தின் மூலம் மக்களை அடக்குவதற்கு ...

வருகை தந்த போது நிகழ்வு முடிவுற்றதையடுத்து ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஒன்லைன் சேப்டி கொமிஷன் என்பது நாட்டினுடைய ஜனாதிபதி இந்த கொமிஷன் சபைக்கு ஐந்து பேரை நியமிப்பார். அந்த ஐந்து பேருக்கும் மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவிப்பார்கள். அதில் வருகின்ற முறைப்பாட்டை ஆராய்ந்து பார்த்து உரிய இடத்திற்கு தெரியப்படுத்தி அதனை அகற்றாவிட்டால் குறித்த நிறுவனத்தை ரத்து செய்ய முடியும் இல்லாவிட்டால் தண்டப்பணம் அறவிட முடியும்.

இவ்வாறான சட்டம் வருமாக இருந்தால் இந்த ஐந்து பேரும் மாத்திரமே எது உண்மை எது பொய் என அறிவிப்பார்கள் அவ்வாறான நிலை ஏற்படப் போவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிலுள்ள 21 மில்லியன் மக்களுடைய குறைபாடுகளை ஐந்து பேர் மாத்திரமே சொல்லக்கூடிய நிலை ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இது சாத்தியப்படுமா என்ற எமக்குத் தெரியாது என்றும் இது ஜனநாயக விரோத செயல் எனவும் இனிவரும் காலங்களில் அரசாங்கத்துக்கு எதிரான எவ்வித கருத்துக்களும் சொல்ல முடியாத நிலையை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான சட்டத்தை அரசாங்கம் அறிமுகம் செய்ய முனைகின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கிழக்கில் தமிழ் மக்களின் காணி அபகரிப்பு

மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிற்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவர் குகதாசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது மயிலத்தமடு மாதவனை போன்ற பிரதேசங்களில் இடம்பெறும் தமிழருக்கு சொந்தமான காணி அபகரிப்பு தொடர்பில் கால்நடை அமைப்புக்கள், பண்ணையாளர்களினால் தொடர்ச்சியாக நடந்து வரும் அறவழிப் போராட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பங்கேற்க வேண்டும் என்ற கோரிக்கை ஆவணம் கையளிக்கப்பட்டது.

எனினும் குறித்த காணிகளானது மகாவலி அதிகார சபைக்கு உட்பட்டது என்பதனால் தன்னால் எந்தவித தீர்மானமும் மேற்கொள்ள முடியாது என ஆளுநர் கூறியுள்ளார்.

இதற்கான தீர்க்கமான முடிவை எடுக்கும் நோக்கில் ஜனாதிபதியை நேரடியாக சந்திக்க தீர்மானித்திருப்பதாக அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு திருகோணமலை மாவட்டம் சம்பந்தப்பட்ட தொல்பொருள் மற்றும் காடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக சாணக்கியன் எம்.பி தெரிவித்துள்ளார்.

# எமது ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் திருமலை, அம்பாறை தமிழர்களின் நிலை மிக மோசமாகும்

## அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்





(சுமன்)

எந்த சந்தர்ப்பத்திலும் எமது ஒற்றுமை சீர்குலையக் கூடாது என்று கருதுபவன் நான். ஏனெனில் அவ்வாறு ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் தமிழர்களின் நிலை மோசமாகும். அதிலும் அதிகம் பாதிக்கப்படப் போகின்ற மாவட்டங்களாக அம்பாறை திருகோணமலை மாவட்டங்களே இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பாண்டிருப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டிலே தமிழ் மக்களைப் பெருத்தவரையில் ஒற்றுமை என்ற விடயத்தில் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றோம். அரசியல்வாதிகளிடமும் இல்லை, மக்களிடமும் இல்லை என்ற ரீதியில் அழிவின் விழிம்பில் நின்றுகொண்டிருக்கின்றோம். இந்தியாவிலே சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக இருக்கின்றார்கள். புலம்பெயர் தேசங்களிலே இலங்கைத் தமிழர்கள் சுமார் இருபது இலட்சம் பேர் வரை வாழ்கின்றார்கள். இந்த நிலையில் இங்கு எமது எதிர்காலம் எங்கே போய் முடியும். கிழக்கு மாகாணத்திலே விகிதாசாரத்தில் முஸ்லீம்கள் மார்தட்டிப் பேசுகின்றார்கள். இந்;தநிலை நீடித்தால் எதிர்காலத்தில் கிழக்கு மண் எமது கைகளில் இருந்து விடுபடக் கூடிய வாய்ப்பப்புதான் இருக்கின்றது.

தமிழ் மக்களாகிய நாங்கள எவ்வாறு இந்த நாட்டிலே வாழப்போகின்றோம் எமது மக்களுக்கான தீர்வு என்ன என்ற விடயத்திலே நாங்கள் தொடர்ச்சியாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ரீதியில் செயற்படும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்காலத்திலும் ஒருமித்துச் செயற்படும் அந்த ஒற்றுமையை நாங்கள் பலப்படுத்துவோம். எந்த சந்தர்ப்பத்திலும் அந்த ஒற்றுமை சீர்குலையக் கூடாது என்று கருதுபவன் நான். ஏனெனில் அவ்வாறு அந்த ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் தமிழ் மக்கள் பெரும் பாதிப்பினை எதிர்கொள்வார்கள். அதிலும் அதிகம் பாதிக்கப்படப் போகின்ற மாவட்டங்களாக அம்பாறை திருகோணமலை மாவட்டங்களே இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தேர்தல் முறைமை காரணமாக சில சில நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த அடிப்படையில் எம்முடன் இணைந்திருந்த கட்சிகள் புதிய கட்சியொன்றை அமைத்திருக்கின்றார்கள். அது நீடிக்கப் போகின்ற விடயம் அல்ல. மீளவும் நாங்கள் கூட்டாக ஒற்றுமையாகச் செயற்படுவோம். அவ்வாறில்லாவிட்டால் கிழக்கில் தமிழ் மக்களே மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவோம்.

# பெரிய கல்லாறு மத்திய கல்லூரி- மட்டு., இந்து கல்லூரி 10 ஆவது கிறிக்கட் சமர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, பெரிய கல்லாறு மத்திய கல்லூரிக்கும், மட்டக்களப்பு இந்து கல்லூரிக்கும் இடையிலான கடின பந்து கிறிக்கட் சமர் "Battle of the everest " 10 வது தடவையாக இடம்பெறவுள்ளது.

3 வருடங்களுக்கு பின்னர் பெரும் எதிர்பார்ப்புடன் மட்டக்களப்பு,கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி மைதானத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

# திருமலையில் உம் மொழி கற்கையினை பூர்த்தி செய்த ஊடவியலாளர்கள் இளம் ஊடக ஆர்வலர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைப்பு





(ஹஸ்பர்)

திருகோணமலையில் 2ம் மொழி கற்கையினை பூர்த்தி செய்த பிரதேச ஊடகவியலாளர்கள் மற்றும் இளம் ஊடக ஆரவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு திருகோணமலை நகர சபை மண்டபத்தில் சனிக்கிழமை (23) இடம் பெற்றது.

குறித்த நிகழ்வானது எழுத்தாணி கலைப் பேரவையின் தலைவர் வடமலை ராஜ்குமார் தலைமையில் இடம் பெற்றது. சிங்களம் பேசுவோர்களுக்கு தமிழ் மொழி கற்கையும் தமிழ் பேசுவோர்களுக்கு சிங்கள மொழி கற்கை என 150 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறி இடம் பெற்றது.

இதனை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதுடன் 44 ஊடகர்கள் ஊடகர ஆர்வலர்கள் இதனை பெற்றனர். சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் குறித்த பாடநெறி இடம் பெற்றதுடன் தேசிய மொழிக் கல்வி நிறுவகம் ஊடான வளவாளர்களால் வகுப்புக்கள் இடம் பெற்றது . கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் எழுத்தாணி கலைப் பேரவைக்கு ஊடகர்களால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராய்ச்சி, திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் பொ.சட்சிவானந்தம் மற்றும் தேசிய மொழிக் கல்வி நிறுவக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# திருமலையில் தேசிய மட்ட பேட்மின்டன் சம்பியன்சிப் போட்டிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பெட்மிண்டன் சங்கத்தினால் தேசிய ரீதியாக நடாத்தப்பட்ட பெட்மிண்டன் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் திருகோணமலை மேக் ஹெயிசர் விளையாட்டு மைதானத்தின் உள்ளக அரங்கில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக தேசிய காங்கிரஸ் தலைவரும் ,திகாமடுல்ல மாவட்ட பாரளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாஉல்லா ,மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராசமாணிக்கம்

விஷேட அதிதியாக முன்னாள் அரச சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஏ.எல்.எம் சலீம் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றிபெற்ற வீர வீராங்கன்களுக்கு கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.




# அம்பாறை மாவட்டத்தில் வீதி சமிஞ்சைகளை மீறும் செயற்பாடுகள் அதிகரிப்பு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் பிரதான வீதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி சமிஞ்சைகளை மீறும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

குறிப்பாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட முக்கிய சந்திகள் பொது இடங்களுக்கு முன்பாக வீதி சமிஞ்சைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட வீதி சமிஞ்சையை அண்டிய பகுதிகளில் போக்குவரத்து பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டும் கூட பாதசாரிகள் முதல் வாகன சாரதிகள் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போர் வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறுகின்ற செயற்பாடுகளை காண முடிகின்றது. இவ்வீதி சமிஞ்சைகள் உரிய செயற்பாட்டில் உள்ள போதிலும் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போர் நிறுத்தல் சமிஞ்சையில் அவ்விடத்தில் நிற்காது பயணம் செய்வதை காண முடிகின்றது. இது தவிர சில மோட்டார் சைக்கிள் வாகன உரிமையாளர்கள் கூட வீதி சமிஞ்சை குறியீட்டை மதிக்காமல் அவசரமாக நிறுத்தாமல் பயணிப்பதுடன் வீதி விபத்துக்களை ஏற்படுத்தி தப்பி செல்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி வீதி சமிஞ்சை குறியீட்டை மீறும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# ஊடகவியலாளர்களுக்கு கௌரவம்!




(அபு அலா)

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) 19 வது ஆண்டு நிறைவும், வருடாந்த ஒன்றுகூடலுடன் புதிய நிருவாகத் தெரிவும் எதிர்வரும் 2023.09.30 ஆம் திகதி பொத்துவில் தனியார் விடுதியில் இடம்பெறவுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தெரிவித்தார்.

ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக்குழுத் தலைவருமான எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்த ஒன்றுகூடலின் போது கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பலவிடயங்கள் பற்றியும், ஒன்றியத்தின் எதிர்காலத்திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதன் பின்னர் புதிய நிருவாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார்.

ஒன்றியத்தின் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அன்றையதினம் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதாகவும், ஒன்றியத்தின் ஊடகவியலாளர்களை இவ்வருட இறுதியில் கௌரவிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் எதிர்ப்பை சந்திக்கப்போகும் கிழக்கு ஆளுநர்

## இம்ரான் எம்.பி எச்சரிக்கை!



(அபு அலா )

திருகோணமலை மாவட்ட மீன்பிடி தடை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் எடுத்த ஒரு தலைபட்சமான முடிவு அம்மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் இது குறித்து ஆளுநர் உடன் மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக திருகோணமலை மாவட்ட மீனவ குழுக்களுக்கிடையில் நிலவும் முருகல்நிலை தொடர்பாகவும், அது குறித்து ஆளுநர் எடுத்த தீர்மானம் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

சுருக்குவலையைப் பொறுத்தவரை அனுமதிக்கப்பட்ட சுருக்கு வலை, அனுமதிக்கப்படாத சுருக்கு வலை என இரண்டு வகையான வலைகள் உள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் உள்ளது.

இதில் சட்டரீதியாக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலை மூலம் கிண்ணியா, மூதூர், திருகோணமலை, நிலாவெளி, இறக்கக்கண்டி, குச்சவெளி, புடவைக்கட்டு, புல்மோட்டை, வெருகல் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 5000 க்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

எனினும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலைக்கும் அனுமதிப்பத்திரம் வழங்க முடியாத சுருக்கு வலைக்கும் வித்தியாசம் அறியாத ஆளுநர், தற்போது சுருக்கு வலை என்பது சட்டவிரோதமான ஒன்று என்ற நோக்கில் ஒரு தலைபட்ச முடிவை எடுத்து திருகோணமலை மாவட்ட சிறுபான்மை மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை இல்லாமலாக்கும் முயற்சியை செய்துள்ளார்.

அங்கு இரண்டு மீனவக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாகவே அந்த முருகல் நிலை ஏற்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இரண்டு குழுக்களையும் அழைத்து இருபக்க நியாயங்களையும் கேட்ட பின்பே தீர்மானத்திற்கு வர வேண்டும்.

ஆனால் கிழக்கு மாகாண ஆளுநர் இதில் ஒரு குழுவினரின் கருத்தைக் கேட்டே இந்த மீன்பிடித்தடை தீர்மானத்திற்கு வந்துள்ளார். இது குறித்து அவரை நேரில் சந்தித்து விடயத்தை தெளிவு படுத்த கடந்த வியாழக்கிழமை பல தடவை முயற்சித்தபோதும் அவரைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொருத்தவரை மீன் நுகர்வில் 50 சத வீதத்துக்கு அதிகமானவை சுருக்கு வலை மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. சாதாரண மீனவக் குடும்பங்கள் இந்தத் தொழிலேயே தங்கியுள்ளனர்.

எனவே இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகான ஆளுநர் இரண்டு தரப்பு நியாயங்களையும் கேட்டறிந்து பூரண தகவல்களைப் பெற்ற பின்னர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதே நியாயமான தீர்வாக அமையும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் சுட்டிக்காட்டினார்.

ஆளுநரின் இந்த நடவடிக்கை அம்மீனவக் குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இதுகுறித்து கிழக்கு ஆளுநர் மீள் பரிசீலனை செய்து உடன் நியாயமான தீர்மானத்திற்கு வர வேண்டும். இன்றேல் எதிர்காலத்தில் பாரிய மக்கள் எதிர்ப்பு ஒன்றை சந்திக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கல்முனை மாநகரில் சொறி நாய்களின் தோல்லை

## மக்களை தேடி கடிக்கும் நிலை



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி சொறி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.அத்துடன் பிரதான வீதிகளில் பொதுமக்கள் நடமாட முடியாத அளவுக்கு கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறித்த வீதியில் அன்றாடம் செல்பவர்களை இந்த சொறி நாய்கள் கடிக்க வருகின்றன.இதன் காரணமாக வீதியில் பயணம் செய்வோர் விழுந்து காயங்களுக்குள்ளாகின்றனர்.

மேலும் வீதிகளில் காணப்படும் விலங்கு எச்சகழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமையினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் இப்பகுதிகளில் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன. தற்போது 20 க்கும் மேற்பட்ட நாய்கள் இரவு பகலாக கட்டாக்காலிகளாக உலாவி நகருக்குள் கழிவுகளை உண்பதற்காக வெளியிடங்களில் இருந்து உட்பிரவேசிக்கின்றன.

மேலும் இப்பிரதேசத்தில் பிரதான வீதிகளில் இரவு பகல் பாராது மேற்படி கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக கல்முனை- நற்பிட்டிமுனை பிரதான வீதி கல்முனை -பாண்டிருப்பு பிரதான வீதி கல்முனை -சாய்ந்தமருது செல்லும் முக்கிய பிரதான வீதிகளில் பகல் இரவு பாராது சொறி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கூட்டம் கூட்டமாக இந்த நாய்கள் வீதிகளில் நடமாடுவதினாலும் வீதிகளில் கூட்டமாக கிடப்பதினாலும் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

எனவே இவ்விடயங்களில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி கட்டாக்காலி சொறி நாய்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்தி பொது மக்களை விபத்துக்களில் இருந்து பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கோரிக்கை தெரிவித்துள்ளனர்.

# சரியாக தமிழ் பேச முடியாது நான் தமிழை கற்க வேண்டும் என ஆசைப்படுகிறேன்

## ஊடகர்களின் 2ம் மொழிக் கற்கை சான்றிதழ் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராய்ச்சி








(ஹஸ்பர்)

சரியாக என்னால் தமிழ் பேச முடியாது இதனை கற்க வேண்டும் என ஆசைப்படுகிறேன் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

திருகோணமலை நகர சபை மண்டபத்தில் (23) இடம் பெற்ற இரண்டாம் மொழி கற்கையை பூர்த்தி செய்த பிரதேச ஊடகவியலாளர்கள் மற்றும் இளம் ஊடக ஆர்வலரகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் வெருகல் பிரதேச மக்கள் என்னை சந்திக்க மாவட்ட செயலகம் வந்த நிலையில் கோபமாக இருந்தனர் பிறகு ஊர் என்ன? பேர் என்ன என வினவினேன் அதன் பிறகு கோபம் தீர்ந்தது ஏனென்றால் தமிழ் பேசும் மக்கள் அவர்கள் இவ்வாறாக நானும் தமிழை திறம்பட கற்க வேண்டும் பேச வேண்டும் என ஆசைப்படுகிறேன் .

வெருகலுக்கு சென்றால் அம் மக்களின் வீட்டுக்கு செல்வேன்.இது போன்ற நிகழ்வுகள் உண்மையிலேயே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வு என குறிப்பிட்ட அவர் இதனை ஏற்பாடு செய்த எழுத்தாணி கலைப்பேரவையினரை பாராட்டினார்.

தமிழ்,சிங்களம் என 150 மணித்தியாலங்கள் இரண்டாம் மொழி கற்கையை பூர்த்தி செய்த 44 ஊடகர்கள்,இளம் ஊடக ஆர்வலர்கள் இதன் போது சான்றிதழ்களை பெற்றனர்.

இதில் கௌரவ விருந்தினராக திருகோணமலை மாவட்ட ஊடகவியலார்கள் சங்க தலைவர் பொ.சச்சிவானந்தம் மற்றும் தேசிய மொழிக் கல்வி பயிற்சி நிறுவன உதவி பணிப்பாளர் திருமதி பி.பி.ரவிராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஒலுவில் பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு







(ஏ.எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டம், ஒலுவில் பிரதேசத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகளை புனரமைப்பதற்கான விசேட கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (24) சஹிட் ஹாஜியார் தோட்டத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றஊப் ஹக்கீமின் பணிப்புரையின் பேரில் அம்பாறை மாவட்டத்தில் கட்சிக் கிளைகளை புனரமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் ஒலுவில் பிரதேசத்தில் 07 கிராம சேவகர் பிரிவுகளிலும் கட்சிக் கிளைகளை புணரமைக்கும் செயற்பாடுகள் இதன்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ. காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளர் ஏ.சி.சமால்தீன், ஒலுவில் பிரதேச அமைப்பாளர் ஏ.எல்.சுபையிர், ஒலுவில் மத்திய குழுவின் தலைவர் ஏ.எல்.ஜெமில் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வங்காலை சுவிஸ் அமைப்பினால் வெப்பத்தை தணிக்கும் தொணிப்பொருளில் மரநடுகை





(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தின் கல்வி விளையாட்டு கலை மற்றும் சமூக அபிவிருத்தி போன்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் மற்றும் சமூக அபிவிருத்தி குழு வங்காலை சுவிஸ் அமைப்பானது எதிர்காலத்தில் வெப்பத்தை தணிகக்கும் தொணிப்பொருளில் மரநடுகையையும் முன்னெடுத்துள்ளனர்.

இயற்கையை நேசித்து மரங்களை நடுவதன் மூலம் வெப்பத்தை தணிப்போம். என்னும் தொணிப் பொருளில் புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்திக் குழு வங்காலை சுவிஸ் அமைப்பினரின் வேண்டுகோளுக்கு அமைவாக ?கிறீன் லேயர் என்வெர்மென்ட்? அமைப்பினர் ஊடாக வழங்கப்பட்ட மரக்கன்றுகளின் முதல் கட்டமாக வங்காலை புனித ஆனாள் ஆரம்ப பாடசாலை வளாகத்தில் 23.09.2023 (சனிக்கிழமை) மரம் நடுகை நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி குழு வங்காலை சுவிஸ் அமைப்பானது கல்வி மற்றும் விளையாட்டு சமூக விழுமியங்களை ஊக்குவிக்கும் பொருட்டு பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றதில் இத்திட்டமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கையை நேசித்து மரங்களை நடுவதன் மூலம் வெப்பத்தை தணிப்போம் என்னும் தொணிப் பொருளில் மேற்கொள்ளப்படும் இதன் முதல் திட்டம் வங்காலை புனித ஆனாள் ஆரம்ப பாடசாலை வளாகத்தில் மரக்கன்று நடும் வைபவம் இடம் பெற்றது.

இன் நிகழ்வில் வங்காலை புனித ஆனாள் ஆரம்ப பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி ளு..றொஷாந்தி மற்றும் வங்காலை புனித ஆனாள் தேசிய பாடசாலையின் அதிபர் பிரான்சிஸ் ஸ்டான்லி டிமெல். லெம்பேட் மற்றும் பாடசாலை பழைய மாணவ சங்கத்தினர் ஆரம்ப பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் புனித ஆனாள் தேசிய பாடசாலையின் அபிவிருத்திச்சங்கத்தினர் மற்றும் ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர்கள் இவர்களுடன் இணைந்து புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்திக் குழு வங்காலை சுவிஸ் அமைப்பினர் கலந்து கொண்டு மரங்களை நடுகை செய்து வைத்தார்கள்.

# ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி அரையிறுதிப் போட்டிக்கு தகுதி

(எம்.எம்.றம்ஸீன்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் மூன்றாவது காலிறுதிப் போட்டி கொழும்பில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஹென்றிஸ் கல்லூரியை 5 - நி2 என்ற கோல்கள் அடிப்படையில் தோற்கடித்து மகத்தான வெற்றியுடன் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் பாடசாலை அணியொன்று இலங்கையின் முதற்தர பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் அரையிறுதிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.




நவீன தமிழ் இலக்கியம்; பார்வை; 02

# நவீன தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் அதன் போக்கும்

மீள் பார்வை

கடந்த வாரத் தொடர்ச்சி...

உரை நடையின் வளர்ச்சி நவீன தமிழ் இலக்கியத்தில் தாக்கம் செலுத்தவே புதிய உள்ளடக்கம், உத்தி ஆகியவற்றைக் கையாண்டு நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதலாயினர். மத்தியதர வர்க்கத்தில் இருந்து தோன்றிய நாவலாசிரியர்கள் சமுதாயப் பிரச்சினைகள், பெண் அடிமை, அடிமை விடுதல, தேச விடுதலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நாவல்கள் எழுதினர். அவற்றுள் மயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் (1876) முதலாவது தமிழ் நாவலாக வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து ராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரம் (1896), மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் (1898) ஆகியனவும் வெளிவந்தன. அதேபோல், சிறுகதைத் துறையில் வா.வே.சு. ஐயர் எழுதிய மங்கயர்கரசியின் காதல் முதலாவது சிறுகதைத் தொகுதியாக வெளிவந்தது. இவற்றில் உருவம், உள்ளடக்கம் என்பவற்றில் சற்றுக் குறைபாடு இருந்தாலும் நவீன இலக்கியத்தின் பண்புகளைக் கொண்டிருந்தமையால் அவை சிறந்தனவாகக் கருதப்படுகின்றன.




தமிழ் கவிதை வரலாற்றில் பாரதிக்கு முன் பல நூற்றாண்டுகளாக மக்கள் கவிஞர்கள் இருக்கவில்லை. பல கவிஞர்கள் வாழ்ந்த போதிலும் அவர்கள் கடவுளரைக் குறித்தெ தோத்திரங்கள், பிரபந்தங்கள், புராணங்களைப் பாடினர். பிறர் கூறியதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். புராண நூல்களில் பல்வகைப் புனைந்துரைகளும் போலியான வரலாறுகளும் இடம் பெற்றன. பொய்யின் பேரெல்லையை இந்நூல்களில் காணலாம். புலவர்கள் மக்களைப் பற்றி மக்களுக்காக, மக்களிடையே வழங்கும் மொழியில் கவிதைகள் இயற்றவில்லை. மக்கள் உள்ளத்தில் செறிந்த கருத்துக்களை, அவர்கள் மனதில் குமுறும் சீரிய எண்ணத் துடிப்புக்களை எடுத்துக் கூறக் கவிஞர்கள் முயலவில்லை. அதனால் அக்காலப் புலவர்கள் தாம் கண்டதையோ, பார்த்ததையோ, அனுபவ வாயிலாகப் பார்த்ததையோ எழுதவில்லை. அதனால் புலவர்கள் மக்களை விட்டு வேறோர் உலகில் பவனி வந்தனர்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சமயத்தை மையப்படுத்திய அறிவுசார் விடயங்களே முதலிடம் பெற்றிருந்தன. நாடெங்கிலும் சமயப் போர் நடந்த வண்ணமிருந்தன. இறைவனின் இயல்பும், உயிர்களின் இயல்பும், படைப்பின் நோக்கமும் புலவர்கள் இயற்றிய நூல்களில் விரிவாக ஆராய்ந்து கூறப்பட்டன. இவ்வாறு கவிதையின் உள்ளடக்கத்தில் சமயம்; ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்திலே மகாகவி பாரதியார் தோன்றினார். சகலவற்றிலும் புரட்சி முளைவிட்டுக் கொண்டிரந்த காலப்பகுதி ஆதலால் இந்திய சமூகம் பழைய அமைப்பு முறைக்குள் புதிய அமைப்பு முறை நுழைவதைப் பார்த்துக் கொண்டிருந்தது. பழமைக்கும் புதுமைக்கும் இடையே நடக்க இருந்த போராட்டத்தில் தானும் ஒரு வீரனாகப் பங்கு கொள்ள முன்வந்தார் பாரதியார். இக்கால கட்டத்தில் தமிழ் நாட்டில் தேசிய இயக்கம் தோன்றியது. சமுதாய உணர்வும் தேச பக்தியும் எங்கும் பரவின. தமிழ் மக்கள் தமது பண்டைய நாகரிகத்தின் சிறப்பினையும், கலைகளின் வளத்தினையும் அறியத் தொடங்கினர். அதன் விளைவாக அவர்களிடையே நாட்டுப் பற்றும், சுதந்திர



வேட்கையும் தோற்றம் பெற்றன. அரசியலில் முழுமையான சுதந்திரம் அடைய வேண்டும் என்ற விருப்பம் மேலோங்கியது. இத்தகைய உணர்வினை மக்கள் மத்தியில் வளர்த்துத் தொண்டாற்றும் பணியில் பாரதியாரும் இணைந்து கொண்டார். மக்கள் கவிஞனாக விளங்கினார். அவரைப் பின்பற்றிப் பாரதிதாசன், தேசிகவிநாயகம்பிள்ளை, ச.து.சு. யோகியார், பிச்சமூர்த்தி, கு.ப.ரா, புதுமைப்பித்தன், நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை ஆகியோரும் நவீன தமிழ் கவஞர்களாக மதிக்கப்பட்டனர்.

மேல் நாட்டாரின் தொடர்பால் நாடக இலக்கியம் புதுப் பொலிவு பெற்றது. 19 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் ஏறத்தாள 500 நாடகங்கள் வெளிவந்ததாக அறிய முடிகின்றன. அவற்றுள் 100 நாடகங்கள் வரை அச்சில் வெளிவந்தன. நவீன உத்தி, உள்ளடக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தி நாடகம் எழுதியவர்களில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, வி.கோ.சூரியநாராயண சாஸ்த்திரிகள், சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோரைச் சிறந்த நாடக ஆசிரியர்களாகக் குறிப்பிடலாம். இலங்கையில் நவீன நாடக இலக்கிய மரபு 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருந்து அரம்பமாகிறது. அதற்குக் காரணமாக இருந்தவர் கலையரசு சொர்ணலிங்கம் ஆவார். அதன் பின்னர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்தியனந்தன், காரை சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சிதம்பரநாதன், பேராசிரியர் சி.மௌனகுரு , சொக்கன் ஆகியோர் நாடக இலக்கியத்தில் உளடக்கம், உத்தி ஆகியவற்றில் பல புதுமைகளைப் புகுத்தினர்.



சின்னத்தம்பி குருபரன்

மேலை நாட்டு இலக்கிய பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு நவீன இலக்கியத்தின் ஓர் அங்கமான விமர்சனக் கலையும் தமிழ் இலக்கியத்தில் தோன்றி வளர ஆரம்பித்தன. முதலாளித்துவ சிந்தனையும் அதற்கு எதிரான மாக்சிய சித்தாந்தமும் பிரபல்யம் பெற்றமையால் விமர்சனக் கலை மேலை நாடுகளில் மிக வேகமாக வளர்ச்சி அடைய ஆரம்பித்தன. இத்தகைய வளர்ச்சிப் போக்கினைத் தமிழ் நாட்டில் பேராசிரியர் வானமாமலை, தமிழண்ணல், பாண்டுரங்கன் ஆகியோரில் இருந்த காண முடிகிறது. அந்த வளர்ச்சிப் போக்கு இலங்கையில் நவீன வணீமர்சன இலக்கியப் பரப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியதனால் பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, க.சுப்பிரமணியன், கேசவன், கனக செந்தில்நாதன், முருகையன், பேராசிரியர் எஸ். தில்லைநாதன், பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மான் போன்றோரின் முயற்சியால் திறனாய்வுக் கலை வளர்ச்சியடைந்து வந்து தற்காலத்தில் தொய்வு நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழ் இலக்கியப் பரப்பில் நவீன இலக்கியத்தின் ஆரம்பம் பேராசிரியர் க.கைலாசபதி கூறுவது போன்று 1850 க்குப் பிற்பட்ட காலத்தில் இருந்து தோற்றம் பெறுகிறதென்றும், அவை தோன்றியமைக்கான காரணங்களும், நவீனம் , நவீன இலக்கியத்தின் தோற்றம் என்பவற்றையும் இக்கட்டுரையில் முன்வைக்க முடிந்தது. இந்நவீன இலக்கியம் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும் ஒருவாறு முன்வைத்துள்ளேன். ;இலக்கியம் எனும்போது உரை நடை, கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், விமர்சனம் ஆகியவற்றை உள்ளடக்கியது என்ற வகையில் அவை ஒவ்வொன்றும் இன்றுவரை பல பரிமாணத்தில் பல மாற்றங்களையும் பரீட்சார்த்த முயற்சிகளையும் செய்து ஒரு சில சவால்களுக்கு மத்தியில் நிமிர்ந்து நிற்கின்றது என்பதில் ஐயமில்லை.

# கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை தற்போது வலுவடைந்து உயர்ந்த மட்டத்தில் உள்ளது

## கிழக்கு மாகாண இராணுவ கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன





(ஏறாவூர் நிருபர் நாஸர்)

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை தற்போது வலுவடைந்து உயர்ந்த மட்டத்தில் உள்ளதாக கிழக்கு மாகாண இராணுவ கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் பொதுமக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மாத்திரமின்றி வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் முதல் நோக்காகக்கொண்டு செயற்பட்டுவருவதாக அவர் மேலும் கூறினார்.

தொப்பிகல பகுதியை அண்மித்த ஈரளக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற விசேட வைபவமொன்றில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டார்.

தொப்பிகல இராணுவ கட்டளையதிகாரி சந்தன வன்னி நாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது பாடசாலை மாணவர்கள் 58 பேருக்கு கற்றல் உபகரணங்களும் 50 வறிய குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகளும் வழங்கப்பட்டன.

23 ஆம் படைப்பிரிவு தலைமையதிகாரி மேஜர் ஜெனரல் கேவிஎன்பீ. பிரேமரத்ன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பிரசன்னமாயிருந்தனர். கிழக்கு மாகாண இராணுவ கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவி;க்கையில் இலங்கை இராணுவ படையினர் தற்பொது பொதுமக்களின் பாதுகாப்பை மட்டுமன்றி பொதுமக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் இளைஞர்களின் விளையாட்டுத்துறையினையும் மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இத்திட்டம் கிழக்கு மாகாணத்திற்கு மாத்திரமின்றி வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள இடங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றார்.

# கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை பழைய மாணவிகள் சங்கத்தினால் கௌரவிப்பு




(எம்.எம்.ஜெஸ்மின்)

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் 2022 கல்வியாண்டில் கலை பிரிவில் பல்கலைக்கழக அனுமதிக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் இடம் பெற்றது .

இந் நிகழ்வில் பழைய மாணவிகள் சங்கத்தினர்களினால் சிறந்த சித்திகளை பெற்ற மாணவிகளுக்கு மாலை அணிவித்தும் பணப்பரிசல்கள் வழங்கியும் கௌரவிக்கப் பட்டனர்.

இந் நிகழ்வில் உயர்தரப் பிரிவு பகுதி தலைவர் யூ.எல்.செய்னுலாப்தீன் மற்றும் உயர்தர பிரிவு ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர் பின்னர் உயர்தர பிரிவில் சித்தி பெற்ற மாணவர்களை உள்ளடக்கிய புகைப்பட பதாதை திரை நீக்கம் செய்யப்பட்டது .

இந் நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர், உயர்தர பிரிவு ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவிகள் சங்கப் பிரதிநிதிகளும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தின் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட பங்குபற்றுதலுடன் கூடிய கல்வி அபிவிருத்தி கட்டம் III அங்குரார்பண நிகழ்வு




(பாறுக் ஷிஹான்)

முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தின் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட பங்குபற்றுதலுடன் கூடிய கல்வி அபிவிருத்தி - கட்டம் - III அங்குரார்பண நிகழ்வு கிண்ணியா வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை(22) நடை பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் நீண்டகாலமாக கல்வி அடைவில் பின் தங்கிய நிலையில் இருந்து வருகின்ற கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள கல்வி மற்றும் கல்வி அடைவுகளைப் பாதிக்கின்ற பல்வேறு தேவைகள் உடைய 13 பாடசாலைகளில் மேற்படி தொணிப்பொருளில் மூன்றாம் கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. முதலாவது கட்டத்தில் 5 பாடசாலைகளும் இரண்டாவது கட்டத்தில் 13 பாடசாலைகளும் இத் தொடர் நிகழ்ச்சித்திட்டத்தில் பயன்பெற்றன.

இலங்கை அரசாங்கத்தின் கல்விக் கொள்கைளை அடியொட்டி நிலைபேறான அபிவிருத்தி இலக்கு - 4 (Sustainable Development Goal & 4 ) இனை பிரதிபலிக்குமுகமாக முஸ்லிம் எய்ட் சிறிலங்கா 13 பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையில், கட்டுமாணம் சார்ந்த மற்றும் கற்றல், கற்பித்தல் , ஊக்கப்படுத்தல் சார்ந்த செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு, வள ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

நவீன கல்விச்சூழலில் மாணவர்கள் உட்பட கல்விச் சமூகம் எதிர்கொள்கின்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாக இக்கருத்திட்டம் அமையும் எனஎதிர்பார்க்கப் படுகின்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் , கிண்ணியா வலயக் கல்விப்பணிப்பாளர் யு.நசூகர்கான் , முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தின் வதிவிடப் பணிப்பாளர் ஏ.சி பைஸர்கான் , பிரதிக்கல்விப் பணிப்பாளர்களும், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் முனீர் முஸ்தபா , திருமலை மாவட்டத்தில் கல்வி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற அரச , அரச சார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகள் , ஊர்ப்பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக இம் மாத இறுதியில் ஓய்வு பெற்றுச் செல்லும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தினால் பாராட்டுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# உப்புவெளியில் 'எழுகை' அறிவு பகிர்வு பயிற்சி பட்டறை






(திருமலை தட்சா)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் திருகோணமலை மாவட்ட எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் வாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் 'எழுகை'அறிவு பகிர்வு பயிற்சி பட்டறையானது உப்புவெளியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களத்தில் கடந்த சனிக்கிழமையன்று (23) நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தென் கிழக்கு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் திருகோணமலை வளாகம் ஆகியவற்றின் சிரேஸ்ட விரிவுரையாளர்களும், இலக்கியம், கலைத் துறை சார்ந்த மூத்த, இளம் ஆளுமைகளும் வளவாளர்களாக கலந்து கொண்டு தங்களது துறை சார்ந்த அறிவையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கலை, இலக்கிய மன்ற உறுப்பினர்களும், மூத்த, இளம் எழுத்தாளர்களும், கலைஞர்களும் நிகழ்வில் பங்குபற்றியதோடு தங்களது துறை சார்ந்த அனுபவங்களையும், சவால்களையும் கருத்துப் பகிர்வுகளாக பகிர்ந்து கொண்டதோடு இவ்வாறானதொரு நிகழ்வினை வருங்காலத்தில் தொடர்ச்சியாக கொண்டு செல்ல வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர்.

# 2023 கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் திருக்கோவில் தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் 13 தங்கப்பதக்கங்ளை பெற்று புதிய சாதனை!



(எம்.எம்.றம்ஸீன்)

அம்பாறை மாவட்ட திருக்கோவில் கல்வி வலையத்தை சேர்ந்த தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் இவ் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப்போட்டியில் பத்து விளையாட்டு போட்டிகளில் 13 தங்கப்பதக்கங்களும் 03 வெள்ளி பதக்கங்களும் ஒரு வெங்கலப்பதக்கங்களை தன்வசமாக்கி கிழக்கு மகாணத்தில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்கள்.

# சீக்கியர்களின் காலிஸ்தான் தனிநாடு? இந்தியாவுடன் விரிசலாகும் கனடிய உறவு?

(காலங்கடந்த கனவாகி போய்விட்டதா காலிஸ்தான் தனிநாட்டு கோரிக்கை? கனடா-இந்தியா உறவில் உச்சக் கட்டமுறுகலை ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலையே தோற்றுவித்துள்ளது என்பது உண்மை, ஆயினும் கனடா-இந்தியா உறவில் உச்சக்கட்டமுறுகலை மேற்குலகு எதிர்பார்த்து இருந்ததா பற்றி அலசும் செய்தி ஆக்கம்)



கனடாவில் சீக்கிய காலிஸ்தானிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டமை தொடர்பில், இந்திய ராஜதந்திரி ஒருவரை கனேடிய அரசாங்கம் நாட்டில் இருந்து வெளியேறுமாறு அறிவித்தது. ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்திய அரசாங்கம் இருக்கலாம் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்திருந்தார்.

ஹர்தீப் சிங்கின் மரணத்திற்கும் இந்திய அரசுக்கும் இடையே 'நம்பகமான' தொடர்பை கனடா உளவுத்துறை கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கனடா-இந்தியா முறுகல் :**

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்திய அரசின் முகவர்களுக்கும், கனடா குடிமகனின் படுகொலைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி கனடா புலனாய்வு துறைகள் தொடர்ந்து விசாரித்து வருகின்றன என கூறியுள்ளார். கனடாவில் குடிமகன் ஒருவர் படுகொலையில் அந்நிய வெளிநாட்டு அரசின் தொடர்பு இருப்பது என்பது ஏற்று கொள்ள முடியாதது என்று அவர் அழுத்திக் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவுக்கான கனடா தூதர் கேமரூன் மெக்கேவை 19.09.2023 அன்று இந்திய வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு, கனடிய இராஜதந்திரி ஒருவரை அடுத்த ஐந்து நாட்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்தியாவின் உள் விவகாரங்களில் கனேடிய ராஜதந்திரியின் தலையீடு மற்றும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சீக்கியர்களுக்கு தனி நாடு:**

இந்தியாவின் உணவு கூடையாக திகழ்ந்து வரும் பஞ்சாப் மாநிலம், ஒப்பீட்டளவில் வளர்ச்சியான மாநிலமாக விளங்கினாலும், அங்கே தற்போது வேலையின்மை பிரச்சனைகளும், விவசாய பிரச்னைகளும் அதன் சமூக மற்றும் பொருளாதார நிலையை சுருக்கி விட்டதாக பொருளாதர நிபுணர்கள் கூறுகின்றனர்.

1980களில் சீக்கியர்களுக்கு தனி தேசம் வேண்டுமென எழுந்த கிளர்ச்சி, பத்தாண்டுகள் வரை நீடித்து வந்தது. இந்த காலகட்டத்தில், பல முக்கிய தலைவர்களும், பொது மக்களும் பாதிக்கப்பட்டனர். பல இளம் சீக்கியர்கள் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த வன்முறையால் ஏற்பட்ட காயங்களின் சுவடுகளை பஞ்சாப் மாநிலம் இன்றும் சுமந்து கொண்டு தான் இருக்கிறது. சீக்கியர்களுக்கென தனி தேசம் வேண்டும் என கூறப்படும் கோரிக்கை இன்னும் தொடர்ந்து வந்தாலும், 1990களில் அந்த கோரிக்கை அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது.

**காலிஸ்தான் உருவாக்க பின்னணி:**

காலிஸ்தான் (Khalistan movement) என்பது சீக்கிய மதம் சார்ந்த தேசியத்தை வலியுறுத்தும் ஓர் அரசியல் இயக்கமாகும். சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு காலிஸ்தான் என்ற பெயரில் இந்தியாவின் பஞ்சாப் மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் என சீக்கியர்கள் அதிகம் வசிக்கும் மாகாணங்களை இணைத்து தனி நாடு வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஜர்னையில் சிங் பிந்தரன்வாலாவால் அமைக்கப்பட்டது தான் காலிஸ்தான் இயக்கம்.

பஞ்சாபில் 1970களின் இறுதியில் தொடங்கிய கிளர்ச்சியானது காலிஸ்தான் கோரிக்கையாக எழுந்தது. கிளர்ச்சிக்கான அடிப்படைக் காரணங்கள் மிகவும் சிக்கலானவை. முதன்மைக் காரணங்களாக சீக்கியத்திற்கும் பஞ்சாபி மொழிக்கும் போதிய அங்கீகாரம் வழங்காததும் 1947இலிருந்து ஆட்சியிலிருந்த இந்தியக் காங்கிரசு அரசின் அக்கறையின்மை என சீக்கியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**இந்தி மொழி திணிப்பு :**

1950களில் பஞ்சாபின் அனைத்துப் பள்ளிகளும் பஞ்சாபி மாணவர்களுக்கு இந்தி கற்பித்ததால் பெற்றோர்களும் சமூகத் தலைவர்களும் கவலையுற்றனர். மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் பஞ்சாபின் அலுவல்மொழியாக பஞ்சாபியை மீளமைக்கவும் பஞ்சாப் தனிமாநில இயக்கம் துவங்கப்பட்டது. பஞ்சாப் தனிமாநில இயக்கத்தை ஏப்ரல் 14, 1955 அன்று இந்திய அரசு தடை செய்தது.

இந்தக் காலகட்டத்தில் சீக்கியர்கள் பெரும் கேலிகளுக்கும் துன்




பங்களுக்கும் ஆளாயினர் என்பதை மறுக்க முடியாது. அமைதிவழியில் போராடியவர்களும் அப்பாவி மக்கள் தடிகளாலும் கற்களாலும் அடிக்கப்பட்டனர்; பலர் கைதாயினர், சீக்கிய கோயில்களில் தேடுதல் வேட்டை நடந்து, சேதமாக்கப்பட்டது.

பஞ்சாப் மாகாணம் சீக்கியர்களின் பாரம்பரிய நிலப்பகுதியாகும். இந்திய நிலப்பகுதிகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் வருவருதற்கு முன் சுமார் 50 ஆண்டுகள் இப்பகுதிகளை சீக்கிய அரச பரம்பரையினர் ஆண்டனர். இந்திய பாகிஸ்தானிய பிரிவினைக்குப் பின் பெருமளவில் சீக்கியர்கள் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலிருந்து இந்தியாவின் பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசத்திற்கு குடியேறினர்.

**மொழிவாரி மாநில எழுச்சி :**

பின்னர் மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையின் அடிப்படையில் அதிக சீக்கியர்கள் வகித்த இந்தியாவின் பஞ்சாப் மாகாணம் மொழியின் அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என அகாலி தளம் கட்சி தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது.




இந்திய அரசு முதலில் இதை நிராகரித்தாலும் பின்னர் நடந்த தொடர் கோரிக்கைகளாலும் வன்முறைச் சம்பவங்களாலும் இந்திய ஒன்றிய அரசு இதற்கு உடன்பட்டது. ஆனால் தங்களுக்கு அதிக அதிகாரம் ஒன்றிய அரசால் தரப்படவில்லை என்ற காரணத்தால் காலிஸ்தான் தேசிய இயக்கம் தொடர்ந்து இயங்கி வந்தது. காலிஸ்தானுக்கு என அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளில் ஆதரவு திரட்ட முயற்சித்தது. 1980களில் காலிஸ்தான் அமைப்பால், காலிஸ்தான் தனி நாடு என அறிவிக்கப்பட்டு அதற்கெனத் தனி நாணயத்தையும் அஞ்சல் தலையையும் வெளியிட்டதும் அறிந்ததே.

**காலிஸ்தான் எழுச்சி:**

சீக்கியர்களுக்கென தனி தேசம் வேண்டுமென கூறி வந்த ஜர்னைல் சிங் பிந்த்ரன்வாலே, 1980ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டார். பின் 1984ஆம் ஆண்டு 'ப்ளூ ஸ்டார்' என்னும் இந்திய ராணுவத்தின் ஆப்ரேஷன் மூலம் அவர் கொல்லப்பட்டார்.

குரு நானக் தேவ் பல்கலைகழகத்தில் பேராசிரியராக இருக்கும் பர்மிந்தர் சிங் கூற்றுப்படி இப்போது சீக்கிய தனி தேசம் வேண்டுமென கூறுவோரின் எண்ணிக்கை மிகவும் சொற்ப அளவிலேயே இருக்கிறது என்கிறார் அவர். இந்நிலையில், காலிஸ்தான் தீவிரவாதம் மீண்டும் தலைதூக்கினால் பல பிரச்னைகள் எழுந்து, பஞ்சாபிலும், அகில இந்திய அளவிலும் சட்டம் - ஒழுங்கு பிரச்னை கெட்டுவிடும் என இந்திய மத்திய அரசு ஊகிக்கின்றது.

**உலகளாவிய வாக்கெடுப்பு :**

இந்தியாவில் சீக்கிய மக்கள் தங்கள் தனிநாட்டு கோரிக்கையை வலுப்படுத்த உலகளாவிய ரீதியில் நடந்த காலிஸ்தான் வாக்கெடுப்புகளை நடாத்தி வருகின்றனர். கடந்த அக்டோபர் 31, 2021 அன்று இங்கிலாந்தில் இருந்து தொடங்கிய வாக்கெடுப்பு சுவிட்சர்லாந்து மற்றும் இத்தாலி முழுவதும் பல நகரங்களில் நடைபெற்று, சுமார் 450,000 சீக்கியர்கள் வாக்களித்துள்ளனர்.

பஞ்சாப் வாக்கெடுப்பு ஆணையம் (PRC), வாக்கெடுப்புகள் மற்றும் நேரடி ஜனநாயகம் குறித்த அணிசேரா நிபுணர்களின் குழுவானது, வாக்களிக்கும் நடைமுறையை வெளிப்படைத்தன்மையையும், சர்வதேச அளவிலான நேர்மையான தேர்தல் என இணங்கி உறுதிப்படுத்துகிறது.

காலிஸ்தான் பொது வாக்கெடுப்பை அதிகாரபூர்வமாக எந்தவொரு மேற்கத்தய நாடுகளும் அங்கீகரிக்கவில்லை. ஆயினும் பலத்த சர்ச்சையை உருவாக்கியுள்ள காலிஸ்தான் வாக்கெடுப்பு முடிந்து போன காலிஸ்தான் பிரச்சினையை மீண்டும் தூண்டிவிட்டு இந்தியாவில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் செயல்படுவதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

தற்போது இந்தியாவில் சீக்கியர்கள் அனைவரும் அமைதியான முறையில், தேசிய ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்து வருகிறார்கள் என இந்திய அரசு கூறினாலும், புலம் பெயர் சீக்கிய மக்களால் காலிஸ்தான் தனி நாட்டு கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. அத்துடன் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலையே கனடா-இந்தியா உறவில் உச்சக்கட்ட முறுகலை தோற்றுவித்துள்ளதும், மேற்குலகால் இந்திய அரசு மீது அழுத்தங்கள் எற்படுமா என்பது கேள்விக்குறியே ?

ஆயினும் காலங்கடந்த கனவாகி போய்விட்டதா காலிஸ்தான் தனி நாட்டு கோரிக்கை? இதற்கு மேற்குலகு ஆதரவு தருகிறதா என்பதும் கேள்விக்குறியே? அத்துடன் கனடா-இந்தியா உறவில் உச்சக்கட்ட முறுகலை மேற்குலகு எதிர்பார்த்து இருந்ததா என்ற ஐயப்பாடும் உள்ளது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# சர்வதேச சமாதான தினம் கொழும்பில் அனுஷ்டிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீதி அமைச்சின் கீழுள்ள தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தினால், ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சமாதான தின நிகழ்வு கொழும்பு மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (22) நடைபெற்றது.

இலங்கை சர்வமத தலைவர்கள் மற்றும் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, இலங்கை பாராளுமன்ற நல்லிணக்கக் குழுவின் தலைவர் டிலான் பெரேரா எம்.பி, அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே சுனாங், நீதி அமைச்சின் செயலாளர் திருமதி வசந்த பெரேரா, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் தலைவர் ஜே.ஜே. ரத்னசிறி (ஜே.மீக்கீ), நல்லிணக்க அலுவலகத்தின் பணிப்பாளர் தீப்தி லமாஹேவா மற்றும் கௌரவ அதிதிகள், தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் மற்றும் இந்த தேசத்தின் உற்சாகமான எதிர்கால சந்ததியினர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே சுன்ங்கின் உரையாற்றும் போது,



சர்வதேச சமாதான தினத்தை உலகம் கொண்டாடி ஒரு நாளுக்குப் பிறகு, இன்று நாம் கூடும் போது, அமைதியைக் கருத்தாகக் கொண்டாடுவது மட்டுமல்லாமல், அதைச் செயற்படுத்துவதற்கு நமக்கு நாமே சவால் விடுவோம்.

குறிப்பாக இலங்கையின் 75ஆவது சுதந்திரம் மற்றும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் - வளர்ச்சி, சவால்கள் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் பகிரப்பட்ட பயணத்தை நினைவுகூரும் வேளையில், சிந்திக்கவும் செயற்படவும் இது ஒரு சிறந்த தருணமாகும் என்றும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 16.07.1948



இறப்பு 23.09.2023

## விநாயகமூர்த்தி மாணிக்கம்

இலகடி அல்வாய் கிழக்கை பிறப்பிடமாகவும் (Oman, Auckland New Zealand, Melbourne Australia) வை வசிப்பிடமாகக் கொண்டிருந்த திரு. மாணிக்கம் விநாயகமூர்த்தி (இளைப்பாறிய பொறியியலாளர் , இலங்கை, ஓமான்) அவர்கள் (23.09.2023) சனிக்கிழமை மெல்பனில் இயற்கை எய்தினார்.

அன்னார் இலகடியைச் சேர்ந்த காலம் சென்றவர்களான திரு. திருமதி மாணிக்கம் நாகம்மா ஆகியோரின் மூத்த மகனும், காலம் சென்றவர்களான திரு. திருமதி இராசையா சிதம்பரம் ஆகியோரின் அன்பு மருமகனும், சந்திரவதனாவின் பாசமிகு கணவரும், பிரதீபன் (அவுஸ்திரேலியா), வசீகரன் (இங்கிலாந்து), அரவிந்தன்வு (அவுஸ்திரேலியா), வனோஜா (அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகிருஷ்ணமூர்த்தி பத்மாதேவி, தனலட்சுமி தேவி (இலங்கை), காலம் சென்றவர்களான சுந்தரமூர்த்தி, பஞ்சாட்சரமூர்த்தி, தட்சணாமூர்த்தி மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற இராசையா இராமச்சந்திரனின் மைத்துனரும், சியாமா (அவுஸ்திரேலியா), நிலக்சனா (இங்கிலாந்து) துஷாந்தி (அவுஸ்திரேலியா), மகிமன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனிக்கா, அனிஷ், அஷ்விதா, ஆரியா, இலக்கிய, ஆதித்தியா, சியாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28.09.2023 வியாழக்கிழமை நடைபெற்று, Boyd Chapel,Springvale botanical cemetery, 600 Princes Hwy, Springvale VIC 3171 Australia வில் பிற்பகல் 2.30 லிருந்து 3.30 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு தகனம் செய்யப்படும். உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல் குடும்பத்தினர்

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 30

# சிலம்பக் கலையின் மூத்த கலைஞர் கனகசபை சிவசுந்தரம்

# கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

சிலம்பம் என்ற பெயர் சிலம்பு என்ற வார்த்தையில் இருந்து உருவானது. சிலம்பு என்பதற்கு ஒலித்தல் என்று பொருள். சிலம்பம் ஆடும் போது உருவாகும் ஒலிகளை குறிக்கும் விதமாக சிலம்பம் என்ற பெயர் சூட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. அக்காலத்து மக்கள் விலங்குகளிடம் இருந்து தம்மை காத்துக் கொள்ள சிலம்பக் கலையை பயன்படுத்தினர். தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் முதலில் எடுத்தது கம்பு எனப்படும் ஆயுதமே ஆகும். இதுவே பின்னர் சிலம்பம் கலையாக வளர்ச்சி பெற்றது. சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக் கம்பினால் தொடுதல் போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. தற்காலத்தில் இக்கலையினை ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் கற்று வருகின்றனர்.

அவ் வகையில், திருக்கோணமலையின் வரலாற்று பாரம்பரியம் கொண்ட தம்பலகாமத்தின் பட்டிமேட்டைப் பிறப்பிடமாகக் கொண்டு கனகசபை மாணிக்கம் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் க.சிவசுந்தரம் தனது பாடசாலைக் கல்வியை தம்பலகாமம் பட்டிமேடு சாரதா வித்தியாலயம் மற்றும் தம்பலகாமம் மகா வித்தியாலயத்திலும் (தற்போதைய தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயம்) பயின்ற இவர் பரம்பரையாக தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோவிலின் வரிபத்தார் (வைராவியார்) தொழும்பு முறையினை ஆற்றி வருகின்றார்.

விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையும் ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வரும் இக்கலைஞரின் கலைத்துறை பிரவேசத்தை எடுத்துக் கொண்டால் இவரது தந்தையாரான கனகசபையும், தந்தையாரின் தந்தை (அப்பப்பா) காளியப்பும் சிலம்பாட்டக் கலையில் தேர்ச்சி பெற்ற விற்பன்னர்கள் ஆவர். அவர்களது பரம்பரையின் மூலமாக வந்த நம் கலைஞரும் தனது 21ஆவது வயதிலிருந்து சிலம்பம் கலையில் ஆர்வம் கொண்டு முறைப்படி பயிற்சி பெற்று கற்றுத் தேர்ந்தார். அதன் பின்னராக தம்பலகாமத்தில் இடம்பெறும் கலை நிகழ்வுகளிலும், திருமண நிகழ்வுகளிலும், கோவில் திருவிழாக்களிலும், ஊர்வலங்களிலும் தன் சிலம்பாட்டக் கலைக்கான மேடையாகத் தேர்ந்தெடுத்து தனது திறமையை மக்கள் மத்தியில் நிரூபித்து தனக்கான அடையாளத்தை பெற்றுக்கொண்டு தொடர்ச்சியாக தனது கலைப் பயணத்தினை தம்பலகாமத்திற்கு வெளியேயும் இடம்பெறும் பாரம்பரிய கலை நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு மேடையேறி தனக்கான அங்கீகாரத்தையும் சமூகத்தின் மத்தியில் பெற்றுக் கொண்டார். குறிப்பாக தம்பலகாமம் பிரதேச செயலகம் மற்றும் திருக்கோணமலை மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்படும் கலாசார நிகழ்வுகளில் சலிக்காது கலந்து கொண்டு தனது கலைப்பணியை இன்று வரை சிறப்பாக ஆற்றி வருகின்றார் என்பது பதிவிடக்கூடிய விடயமாகும். இவ்வாறாக சிலம்பம் துறையில் 50 வருடங்களுக்கு மேலாக காத்திரமான பங்களிப்பை ஆற்றி வரும் மூத்த கலைஞரான கனகசபை சிவசுந்தரம் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் ''திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை'' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்விகாணலை இங்கு காணலாம்.

**? பரம்பரை வழியாக வந்த சிலம்பக் கலையை நீங்கள் பயிலுவதற்கான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது? அதனூடாக உங்களது கலைப் பயணம் குறித்து கூறுவீர்களா?**

சிலம்பம் கலையானது போர்க் கலையாக மட்டுமல்லாது நல்ல உடற் பயிற்சியாகவும், ஒழுக்க முறையாகவும் பயிலப்பட்டு வந்த கலையாகும். இது தமிழ் மக்களின் வீர விளையாட்டு. இத்தகைய பாரம்பரியமிக்க பெருமை கொண்ட இவ் சிலம்பக் கலையானது எங்களது பரம்பரை வழி



யாக கடத்தப்பட்டு வந்ததாகும். அக்காலங்களில் எனது பாட்டனார், எனது தந்தையார் அவர்களது வேலை நேரம் தவிர்ந்த மிகுதி நேரங்களில் தங்களது பொழுதுபோக்குக்காக கற்றுக் கொண்ட கலையே இக்கலை. அதுபோலவே நானும்! எனது தந்தை எனது சகோதரனுக்கு (அண்ணா) சிலம்பத்தை கற்றுக் கொடுப்பதை நான் ஓரமாக நின்று பார்த்துக் கொண்டு வரும் நேரங்களில் எனக்குள் ஏற்பட்ட ஒருவித ஆசையே என்னை சிலம்பத்தை கற்றுக் கொள்வதற்கான ஆர்வத்தை தூண்டியது என்று சொல்லலாம். அதன்பின் எனது 21ஆவது வயதில் சிலம்பத்தை முறைப்படி எனது தந்தையாரை குருவாகக் கொண்டு கற்றும், தந்தையின் இறப்பிற்கு பின்னர் சிலம்பக் கலையின் விற்பன்னரான செல்வராசா அவர்களிடமும் கற்று முடித்தேன். அதன் பின்னராக எமது தம்பலகாமத்தின் கோவில்களிலும், திருமணச் சடங்கு நிகழ்வுகளிலும், எனது சிலம்பம் கலையை மேடையேற்றியுள்ளதுடன் தம்பலகாமத்திற்கு வெளியுள்ள இடங்களில் நடைபெறும் கலை நிகழ்வுகளிலும் குறிப்பாக தம்பலகாமம் பிரதேச செயலகம், திருக்கோணமலை மாவட்ட செயலகம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் நடாத்தப்படும் கலாசார நிகழ்வுகளிலும் எனது சிலம்பம் கலையை இன்று வரை



யில் மேடையேற்றி வருகின்றேன்.

**? சிலம்பக் கலையினை கற்க விரும்பும் ஒருவர் அறிந்திருக்க வேண்டிய விடயங்கள் குறித்து கூறுவீர்களா?**

சிலம்பம் கலையானது ஒரு தடியடி தற்காப்புக் கலையாகும். இதை கம்பு சுற்றுதல் என்றும் சிலர் கூறுவர். தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலமாக தம்மை பாதுகாத்துக் கொள்ளுதல் என பல வகைக் கூறுகளைக் கொண்ட கலையாகும். சிலம்பாட்டத் தடியை பயன்படுத்தப்படுவதன் அடிப்படையில் அடிமுறை, தொடு முறை, சுற்றுமுறை என மூன்று வகையாக சொல்லலாம். குறைந்தபட்சம் சிறுவர் முதல் பெரியவர் வரை ஆர்வம் கொண்டு விருப்பப்பட்டால் குருவிடமிருந்து முறையாக பயிற்சி பெற்று சிலம்பாட்டத்தை விளையாடலாம். மூங்கில் அல்லது பிரம்பால் செய்யப்பட்ட சிலம்பத் தடியைப் பயன்படுத்துவதே உத்தமம். சிலம்பத் தடியின் உயரம் விளையாடுபவரின் நெற்றியளவு உயரத்திற்கே இருக்க வேண்டும். சிறுவர்கள், பெரியவர்கள் என்ற பாகுபாடு இன்றி எந்த வயதினரும், எந்த வயதினரோடும் சிலம்பம் விளையாடலாம். ஒற்றை கையிலும், இரண்டு கைகளிலும் சிலம்பம் விளையாடலாம். கைகளுக்கு எந்தளவுக்கு அசைவுகள் கொடுக்கிறோமோ அதற்கு சமமாக கால்களுக்கும் அசைவுகள் கொடுக்க வேண்டும். இவ்வாறாக பல விடயங்களை கைக்கொள்ள வேண்டும். இவற்றை செயல் வடிவத்தில் கற்றுக் கொடுப்பதே சிறந்த கற்பித்தல் முறைமை. மொத்தத்தில் சிலம்பம் மூலமாக விளையாடிக் கொண்டே ஓய்வெடுக்கும் மகிழ்ச்சி நிறைந்த அனுபவத்தை பெறலாம் என்பது எனது அனுபவ நம்பிக்கையாகும்.

**? சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சிலம்பத்தை கற்றுக் கொள்ள முடியும் எனக் கூறினீர்கள். இதனைப் பயில்வதனால் அவர்கள் பெறும் நன்மைகள் குறித்து கூற முடியுமா?**

நான் முதலில் கூறியது போல சிலம்பம் என்பது சிறந்த உடற்பயிற்சி. ஆகவே சிலம்பத்தை சிறுவர்களும், பெரியவர்களும் கற்றுக் கொண்டு பயிற்சி செய்வதால் உடல் வலிமையோடு மன வலிமையையும் பெற முடியும். வெற்றி தோல்விகளை சமமாக கற்றுக் கொடுக்கும் சிலம்பம் விளையாட்டை சிறுவர்கள் குறிப்பிட்ட வயதிலிருந்து விளையாடுவதன் மூலமாக தன்னம்பிக்கை, விட்டுக் கொடுக்கும் குணத்துடன் நினைவாற்றலையும் தொடர்ந்து பயிற்சி செய்வதன் வாயிலாக கை, கால்கள் பலம் பெறும். பெரியவர்கள் சிலம்பம் பயிற்சியை மேற்கொள்ளும் போது உடல் வலிமை பெற்று இருதய கோளாறுகள், மன அழுத்தம், உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டு உடலை நோய் நொடியின்றி ஆரோக்கியமாகவும், மணமகிழ்வாகவும் வைத்திருக்கக்கூடிய சூழலை பெற்றுக் கொள்ள முடியும்.

**? சிலம்பக் கலையில் உங்களுக்குப் பிடித்த வகை பற்றி கூறுவீர்களா?**

சிலம்பத்தில் பல வகைகள் உண்டு. அவற்றில் எனக்குப் பிடித்த வகை அலங்காரச் சிலம்பம் வகை. இதனை திருமண வீடுகள், கோவில் ஊர்வலங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் மேடை ஏற்றியுள்ளேன்.

**? நீங்கள் வாழ்கின்ற தம்பலகாமம் கிராமத்தில் உங்கள் கலைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது எனக் கூறுவீர்களா?**

எனது சிலம்பம் கலை மூலமான வரவேற்பு மிகைவாகவே உள்ளது. வெறுமனே ஆலயம் சார்ந்த நிகழ்வுகள், திருமண விழாக்கள் என மட்டுமல்லாமல் தம்பலகாமத்திற்கு வெளியே நடாத்தப்படும் கலாசார நிகழ்வுகளிலும், இன்று எனது 75ஆவது வயதிலும் சிலம்பம் கலையை மக்கள் மத்தியில் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் மேடையேற்றி வருகிறேன். எனது சிலம்பம் கலையை மேடையேற்றும் படி யார் வந்து அழைத்தாலும் எந்தக் கலை நிகழ்வாக இருந்தாலும், குறுகிய கால அழைப்பாக இருந்தாலும் அவ்விடத்திற்கு சென்று சிலம்பம் கலையை மேடையேற்றி வருகிறேன். அதன் மூலமாக எனது கிராமத்தின் மத்தியில் வரவேற்புடன் கூடிய அங்கீகாரம் கிடைத்துள்ளமை மனமகிழ்வே!

**? சிலம்பம் துறையில் உங்கள் பிள்ளைகளின் பங்களிப்பு குறித்து கூறுவீர்களா?**

எனக்கு மூன்று பிள்ளைகள். இருவர் ஆண் பிள்ளைகள். ஒருவர் பெண் பிள்ளை. எனது இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும் பரம்பரை வழியாக வந்த இவ் சிலம்பம் கலையை முழுமையாக கற்றுக் கொடுத்து விட்டேன். எனது அடுத்த தலைமுறைக்கு சிலம்பம் கலையை நகர்த்தி விட்டேன் என்ற முழுத் திருப்தியையும் பெற்று விட்டேன். எனக்குப் பின் இதனை அவர்களும் தங்களது வேலை நேரம் தவிர்ந்த கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் இக்கலையை முன்னெடுத்து செல்வார்கள் என்ற நம்பிக்கை என்னிடத்தில் முழுமையாகவே உள்ளது.



**? இன்றைய காலகட்டத்தில் பெண்கள் தற்காப்பு கலையை கற்பதன் அவசியம் குறித்து கூறுவீர்களா?**

இன்றைய சூழ்நிலையில் பெண்கள் கண்டிப்பாக தற்காப்பு கலையை கற்பது மிகவும் நல்லது. காரணம் தற்காலத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரித்து வருவதைக் காண முடிகிறது. அதனால் இக்காலத்தின் சூழ்நிலைக் கருதி தற்காப்பு கலைகளை பெண்கள் கற்றுக் கொள்வது அவசியமானதொன்றாகும். இன்று ஏராளமான தற்காப்பு கலைகள் இருக்கின்றன. அதில் தாங்கள் விரும்பிய ஒன்றை முறையான ஒருவரிடமிருந்து முறைப்படி கற்று பயிற்சியினை மேற்கொள்வதன் மூலமாக தங்களை எதிர்நோக்கி வரும் ஆபத்துக்களிலிருந்தும், பெண்களுக்கெதிராக நிகழும் வன்முறைக

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 30

# சிலம்பக் கலையின் மூத்த கலைஞர் கனகசபை சிவசுந்தரம்

# கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

ளில் இருந்தும் சுயமாக தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் வலிமையையும், தைரியத்தையும் பெற முடியும். ஒவ்வொரு பெண்ணும் தற்காப்பு கலையை கற்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

**? சிலம்பம் தற்காப்புக் கலையை பயிலும் ஒருவருக்கு கிடைக்கும் பயன்கள் குறித்து கூறுவீர்களா?**

இக்கலையை விரும்பிப் பயிலும் ஒருவருக்கு மன அழுத்தமற்ற மன வெழுச்சிகள் உண்டாகும். சுய தைரியமும், தன்னம்பிக்கையும் ஏற்படும். உறுதியான உடல் அமைப்பைக் கொடுக்கும். மொத்தத்தில் ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் நல்ல உடற்பயிற்சியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**? இத் துறையில் உங்களது எதிர்பார்ப்பு குறித்து கூறுவீர்களா?**

பாரம்பரியக் கலைகளில் ஒன்றான சிலம்பம் கலை பழம்பெரும் கலையாகும். இக்கலையை நாம் எச்சந்தர்ப்பத்திலும் நலிவடைந்து செல்லும் நிலைக்கு கொண்டு செல்லக்கூடாது. நமது சமுதாயம் ஆர்வம் கொண்டு சிலம்பம் கலையை அதன் தன்மை மாறாமல் தொடர்ச்சியாக கொண்டு செல்ல வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. எமக்கு அடுத்து வரும் இளம் தலைமுறையினரே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

**? இக் கலைத் தவிர வேறு கலைத் திறமைகள் பற்றி கூறுவீர்களா?**

தம்பலகாமத்தில் நடைபெறும் மரபு ரீதியான வழிபாட்டுச் சடங்கு முறைகளில் நேர்கடனுக்கான காவடிகள் செய்தல், கும்பம் கட்டுதல் போன்றவற்றை செய்து வருகிறேன்.

**? இக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வெற்றிகள், விருதுகள் குறித்து கூறுவீர்களா?**

பெரும்பாலும் ஆலய நிர்வாக சபையினரால் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்வார்கள். சர்வதேச இந்துமத குரு பீடத்தால் 'சிவநெறித் தொண்டன்' என்ற சிறப்புப் பட்டம் கிடைத்தமை. கலைச் சேவையைப் பாராட்டி, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையில் மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்பட்ட பாரம்பரிய கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் தம்பலகாமம் பிரதேசம் சார்பாக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை.



**? நிறைவாக, வளர்ந்து வரும் இளங் கலைஞர்களுக்கு கூற விரும்புவது?**

உழைப்பிற்காக கலையை தேர்ந்தெடுக்காதீர்கள். எம்மிடத்தில் உள்ள கலைத் திறமையை நாம் சரியான முறையில் அடையாளம் கண்டு கொண்டு அத் திறமையை சரியான வழியில் முன்னேற்றுவதற்கான முயற்சியையும், கடும் உழைப்பையும் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சமுதாயத்தால் எமக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறும் என்பது உண்மையான விடயமே! ஆகவே வளரும் தலைமுறையினரான நீங்கள் இதனை மனதில் வைத்துக் கொண்டு எமது பாரம்பரிய கலைகளும் அழிவடையாமல் உங்களது கலை வாழ்வுக்காக சலிக்காது செயலாற்றுங்கள். வெற்றி உங்களை வந்தடையும். தன்னம்பிக்கையுடனான பொறுமையுடன் காத்திருங்கள்.

அந்த வகையில், எம் போன்ற கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

இன்றைய காலகட்டத்தில் பாரம்பரிய கலைகள் அழிவின் விளிம்புக்கு சென்று கொண்டிருக்கின்றன. அவற்றை அழியாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டு அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு எம் இளம் தலைமுறையினருக்கும், ஊடகங்களுக்கும், சமூக அமைப்புகளுக்குமே ஆகும். இதற்கான முயற்சிகளை முன்னெடுத்து நமக்கானதும், நமக்கே மட்டும் உரிய தனித்துவமான பழம்பெருங் கலைகளை பொக்கிஷமாக பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை நாம் விரைந்து செயற்படுத்தும் போது எமது பாரம்பரிய கலைகள் அழிவின் விளிம்புக்கு செல்லாமல் எம்மால் தடுக்க முடியும். அத்துடன் மூத்த கலைஞர்களின் மனக் குமறல்களையும் எம்மால் நீக்க முடியும் என்பது எனது கருத்தாகும்.

அவ்வகையில், சிலம்பம் கலை மூலமாக திருக்கோணமலை மாவட்டத்திற்கு பெருமையைத் தேடித் தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிரார்த்திப்பதோடு கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**தொடரும்.......**
**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்.**

---

## சுவாமி விவேகானந்தர் திருவருட்சிலை திறந்து வைப்பு!

## இகிமிசன் சுவாமி நீலமாதவானந்தா ஜீ திறந்து வைத்தார்





**( வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கொட்டகலையில் சுவாமி விவேகானந்தர் திருவுருவச்சிலையை திறந்து வைத்தார்.

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கொட்டகல டெலிகிளேயர் பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

பாடசாலை அதிபர் எஸ்.அலெக்சாண்டர் தலைமையில் திறப்பு விழா நேற்று முன்தினம் (25) சிறப்பாக இடம் பெற்றது. அச்சமயம் ஆலயவழிபாட்டின்பின்னர் மட்டக்களப்பில் இருந்து சென்ற ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அதனை ஆசார பூர்வமா திறந்துவைத்தார்.

தொடர்ந்து மலையக மக்களுக்கு அருளுரை ஆற்றினார். அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரும் சுவாமிகளிடம் ஆசி பெற்றனர்.

## ஆசிரியர் கலாசாலையின் நான்காவது ஒன்று கூடல்!





**( வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991 /1992 புலனஅணியினரின் நான்காவது ஒன்று கூடல் நிகழ்வு (25) ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

புலன அணியின் தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், திருமலை தொடக்கம் திருக்கோவில் வரையிலான 42 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். விசேட அதிதிகளாக மண்முனை தென்மேற்கு தவிசாளரும் முன்னாள் அதிபருமான சிவஞானம் அகிலேஷ்வரன் மற்றும் குடும்ப உறுப்பினராக முன்னாள் அதிபர் கே. பாஸ்கரனும் கலந்து சிறப்பித்தார்.

அதேவேளை, மட்டக்களப்பு ஊரணியை சேர்ந்த புலன உறுப்பினரான கவிமாமணி புண்ணியமூர்த்தி அஞ்சலாதேவி தம்பதியினரின் 29 வது திருமண நாள் விழாவும் சிறப்பிக்கப்பட்டது. அருட்கவியரசு ஆ.புட்கரன் திருமணநாள் வாழ்த்தை யாத்து பாடி வழங்கினார். பொன்னாடை போர்த்தி லண்டன் நண்டு நடா மற்றும் உறுப்பினர்களின் அன்பளிப்பு வழங்கி வைக்கப்பட்டன.

கூடவே, அணியின் பாடகி ஆசிரியை சுகுணமதியின் தாயாரின் இறுதி கிரியையிலும் புலன அணியினர் கலந்து கொண்டார்கள்.

## தபால் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

அனைத்து தபால் ஊழியர்களுக்கும் மாதாந்தம் 20,000 ரூபா வாழ்வாதார கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினர் நேற்று (25) நுவரெலியா தபால் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



பணி நியமனம், பதவி உயர்வு உள்ளிட்ட நிர்வாக பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு காண, தபால் வருவாயை அதிகரிக்கும் சட்ட மேம்பாட்டு முன்மொழிவுகளை உடனடியாக அமல்படுத்த வேண்டும், ஊழியர்களை ஒடுக்கும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டும், ஊழியர் உரிமைகளை பறிக்கும் அரசாணையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என கோரிக்கை விடுத்து தபால் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் 25 தபால் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மதிய உணவு நேரத்தின் போது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். இதன் போது பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## முதலாம் இடத்தை தலவாக்கலை தேசிய பாடசாலை

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

மாகாண மட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் வில்லுப்பாட்டு போட்டியில் மத்திய மாகாணத்தில் 14 கல்வி வலயங்களுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தை தலவாக்கலை தேசிய பாடசாலை பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. போட்டியில் வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர் கூ.சாந்தகுமார் ஆகியோருக்கும் பாடசாலை நிர்வாகம் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.



# தெஹிவலையில் புதிய அல் அய்ன் கிளை திறந்து வைப்பு













(சில்மியா யூசுப்)

தெஹிவலையில் பல வருடங்களாக இயங்கி வந்த அல் அமீனின் மற்றுமொரு புதிய கிளையாக அல் அய்ன் என்ற பெயருடன் உத்தியோக பூர்வமாக 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல. 198,காலி வீதி தெஹிவலை HNB வங்கிக்கு அருகாமையில் அமைந்துள்ள புதிய அல் அய்ன் கிளையில் திறந்து வைக்கப்பட்டது.

ஆண்களுக்கான இஸ்லாமிய ஆடைகளையும், பெண்களுக்கான அபாயா, ஹிஜாப், புர்க்கா, போன்ற அனைத்து விதமான பொருட்களை விற்பனை செய்து வந்த அல் அமீன் இனி தனது புது கிளை அல் அய்ன் (AL AYN) பெண்களுக்கென்றே

ஓர் தனித்துவமான முறையில் அனைத்து வித நவீன அலங்காரத்துடனான அபாயா,சோல்,சல்வார்,ப்பேர்பியும், பேர்ஸ்,ஹேன் பேக், ஜுவலரி, ப்ரேன்டட் கடிகாரவகைகள் , தயமம் பெட்டிகள், திருமணத்திற்கு தேவையான அனைத்து மரவ வகைகள், மற்றும் இன்னும் பல அம்சங்களை இங்கு கொண்டு புதிதாய் பயணிக்கிறது.மேலும் இது ஓர் புதிய மாற்றத்துடன் அமையபெற்றுள்ளது என்பதும் குறிப்பிடதக்கது.

